**O.S.No. 320/2019**

**PW1 : சந்தோஷ்பாலு** தேதி 08.4.2026

வாசா 1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த தேதி 20.8.2018. சம்பவம் நடைபெற்ற உடனேயேவோ அல்லது பாலிசி முடிவதற்கு உண்டான காலத்திற்குள்ளாகவோ சம்பவம் பற்றி பாலிசி சம்மந்தப்பட்ட நபர்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு தகவல் கொடுக்க கடமை பட்டவர்கள் என்றும் இந்த சம்பவத்தை பொறுத்தவரை மேற்கண்டவாறு எந்த ஒரு தகலும் பாலிசி நிபந்தனைகளின்படி காப்பீட்டு நிறுவனத்திற்கு வர பெறவில்லை என்பதால் பாலிசி நிபந்தனைகளின்படி காப்பீட்டு நிறுவனத்திற்கு எந்த ஒரு கடப்பாடும் இல்லை என்று சொன்னால் பாலிசி விவரம் எனக்கு எதுவும் தெரியாது. மேற்கண்ட எந்த ஒரு பாலிசி நிபந்தனைகளும் பின்பற்றப்படாத காரணத்தினால் 5 மற்றும் 6 பிரதிவாதிகளை பொறுத்து தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பாலிசி நிபந்தனைகளின்படி பாலிசி எடுத்தவர்களின் பொறுப்புணர்வு தீர்மானிக்கப்பட்ட பின்னர் தான் இந்த பாலிசியானது நடைமுறைக்கு வரும் என்றும் இந்த நிலையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் நிலைப்பாடு தீர்மானிக்கப்படாத நிலையில் இந்த 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தாவாவிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவாவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் செயல்பாடுகள் குறித்து நான் சொல்லியுள்ள குற்றசாட்டுகள் எதுவும் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 5 மற்றும் 6 பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.